# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),

முறையீட்டு மனு (மூ.மு) எண்: 0913/ஊராட்சி/2018

நாள்: 23/7/2018

எஸ். நாகர்,
S/o. நாகராஜன் (லேட்),
ஹோலி கிராஸ் காலேஜ் ரோடு,
மூவேந்தர் நகர், நாகர்கோவில் – 4. – மனுதாரர்

உதவி இயக்குநர் (பஞ்சாயத்து),
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
கன்னியாகுமரி மாட்டம்,
நாகர்கோவில் மற்றும் பலர். – எதிர் மனுதாரர்கள்

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில், மூவேந்தர் நகரில் வசிக்கும் திரு. S. நாகர் அவர்களின் 9.7.18 நாளிட்ட புகார் மனுவில், கிரைய ஆவண எண்.3047/2013 நாள்:27.8.2009ல் மனுதாரர் திரு. நாகர் என்பவருடைய சொத்து தேரேகால் புதூர் கிராம சர்வே எண்.142/5 மற்றும் 142/4ல் இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், அவருடைய நிலத்திற்கு வழி பொதுப் பாதையாக இருந்தது என்றும், அவ்விடத்தினை திரு. சிவசுப்ரமணியன் அவர்களின் மனைவி திருமதி. பிரேமா, திரு. அருள்ராஜ் என்பவருக்கு சட்டத்திற்கு விரோதமாக விற்பனை செய்துள்ளார் என்றும், இவ்வாறான சட்டவிரோத பரிவர்த்தனையினால் தனது இடத்திற்கு செல்ல வேண்டிய பாதை வழியினை உள்ளடக்கி மனைப் பிரிவு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது என்றும், இதற்கு முன்னாள் தேரேகால் புதூர் ஊராட்சி தலைவி மற்றும் அவருடைய கணவரும் உடந்தையாக இருந்தார்கள் என்றும், மேற்படி பாதையினை சட்டத்திற்கு புறம்பாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை சரியாக அளந்து அகற்றிதர உதவி செய்யுமாறு வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோர்களை அணுகியும், ஆக்கிரமிப்பினை அகற்றவில்லையெனத் தெரிவித்தும், ஆக்கிரமிப்பினை அகற்றி, பொது சாலை அமைத்துத்தரவும், நடவடிக்கை எடுக்காத அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கவும் கோரியுள்ளார்.

2. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம், பிரிவு 2, உட்பிரிவு (7)ன்படி "உள்ளாட்சி அமைப்பு" என்பதற்கான பொருளில் "ஊராட்சி மன்றம்" மற்றும் "ஊராட்சி ஒன்றியம்" என்ற அமைப்புகள் வரையறுக்கப்படவில்லை. எனவே, மனுதாரரின் மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ள வழிவகையில்லை. எனவே, இம்மனுவினை உதவி இயக்குநர் (ஊராட்சிகள்), மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அவர்களுக்கு தக்க நடவடிக்கைக்காக மேலனுப்பலாம் என முடிவு செய்து, அவ்வாறே அனுப்பப்படுகிறது. மேலும் இப்பொருள் குறித்து, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகர்கோவில் அவர்களை அணுகுமாறு மனுதாரருக்கு அறிவுறுத்தி ஆணையிடப்படுகிறது.

2018-ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 23 -ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு, அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//––
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்
திரு. எஸ். நாசர்,
ஹோலி கிராஸ் காலேஜ் ரோடு,
மூவேந்தர் நகர், நாகர்கோவில் – 4.

நகல்

1. உதவி இயக்குநர் (ஊராட்சிகள்),
   மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
   நாகர்கோவில் (இணைப்புகளுடன்)
   கன்னியாகுமரி மாவட்டம்.
2. இயக்குநர் ,
   பஞ்சாயத்து ராஜ் மற்றும் கிராம ஊராட்சிகள்,
   பனகல் மாளிகை,
   சைதாப்பேட்டை, சென்னை – 600 015.
3. முறைமன்ற நடுவர் அவர்களின் நேர்முக எழுத்தர்
4. ஊராட்சிகளின் உதவி பிரிவு அலுவலர்.